1973 ஏப்ரல் 5]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : *தலைவரவர்களே, அதனுடைய பணிகள்பற்றிய முழு விவரம் தெரியவில்லை. பாரதிய வித்யாபவனம் அதனுடைய கிளை ஒன்றைச் சென்னையில் அமைக்க 1,60,000 ரூபாய் மதிப்புள்ள ஒரு கட்டடத்தை வாங்குவதற்கு நம்முடைய அரசு மானியம் வழங்க வேண்டுமென்று 1963-லே கேட்டார்கள். அவர்கள் கோரிக்கையைப் பரிசீலித்து 25,000 ரூபாய் மானியமாக இந்த அரசு கொடுத்தது. ஆனால் அதனுடைய பணி விவரங்களுக்கான தகவல் இல்லை.*

கன்னியாகுமரி மாவட்ட நகரப் பஞ்சாயத்துக்களின் வருவாய் தரும் திட்டங்கள்

* 632. வினா—திரு. ஏ. பாலையா : *மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) 1972–73-ம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நகரப் பஞ்சாயத்துக்கள் பஸ் நிலையம், சந்தை அபிவிருத்தி போன்ற வருவாய் தரும் திட்டங்களை (Remunerative Enterprises *நிறைவேற்றுவதற்கெனக் கடன் கோரி அரசுக்கு எந்தனை மனுக்கள் அனுப்பியுள்ளன ?*

(இ) அந்நகரப் பஞ்சாயத்துக்கள் எவை எவை ?

(உ) அவற்றில் இந்த நிதி ஆண்டில் எத்தனை பஞ்சாயத்துக் களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன ?

(எ) எவற்றிற்கேனும் கடன் வழங்கப்படாமலுள்ளனவா ?

(ஐ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : *(அ), (இ), (உ), (எ) &(ஐ) பிரதிபலன் தரும் திட்டத்தின்கீழ்* (Scheme for remunerative enterprises) *1972–73 நிதியாண்டில் அரசு கடனுதவி கோரி, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எந்தப் பேரூராட்சியிடமிருந்தும் கடன் விண்ணப்பங்கள் வரவில்லை.*

Dam across river Kushastali

* 633 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal under the consideration of the Government to construct a bed-dam across the river 'Kushastali' at Arumbakkam in

Tiruttani taluk and divert the surplus water into a chain of seven tanks ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டத்தின் செயற்குறிப்பு உள்ளூர் அலுவலர்களின் ஆய்வில் உள்ளது. அது இன்னும் அரசு பரிசீலனைசெய்யும் கட்டத்தை அடையவில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : செங்கல்பட்டு மாவட்டத்தில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமானால் சென்னை மாநகராட்சி தம் ஒப்புதலைக் கொடுக்க மறுக்கிறது. இருநூறு, மூந்நூறு ஆண்டுகளுக்கு முன்னாலேயே இருந்துவரும் ஏரிகள் இவை. சென்னை மாநகராட்சி சமீபத்தில்தான் தோன்றியது. ஆகவே நீண்ட நாட்களாக அந்தப் பகுதி மக்களுக்கு இருந்து வருகிற உரிமைகள் பாதிக்கப்படாத வண்ணம், தமிழக அரசு முயற்சி எடுத்து இவற்றுக்கு ஒப்புதலை பெற்றுத்தர முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாநகராட்சி ஆணையர் அதுபற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். அவரது பதில் வந்த பிறகு அரசாங்கம் இதுபற்றி முடிவு எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

காக்கவாக்கம் அருகில் இசா ஏரிக்குத் தடுப்புச் சுவர்

* 634 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், காக்கவாக்கம் இசா ஏரியின் எதிர் முனையில் தொளவேடு கிராமத்தைப் பாதுகாக்க அமைக்கப்படும் தடுப்புச்சுவர்த் திட்டம் (Bund) நிறைவேறுவதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைமைப் பொறியாளர் (பாசனம்) பல தொழில் நுட்பக்குறிப்புக்களை உள்ளூர் அதிகாரிகளை ஆய்வு செய்யுமாறு கேட்டுள்ளார். இவை ஆய்விலுள்ளன. இவ்வேலை தக்க அதிகாரிகளின் ஒப்புதல் கிடைத்த பின் துவங்கப்படும்.